பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

நச்சினார்க்கினியன்

திரிசிரபுரத்தினின்று வெளிவரும்

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"பச்சைமால் அனைய மேகம் பௌவநீர் பருகிக் கான்ற
எச்சில்,நாற் றிசையும் உண்ணும்; அமிர்தென, எழுநா எச்சில்
மெச்சிநா ளுளும் விண்ணோர் மிசைகுவர்; வேத போதன்
'நச்சினார்க் கினியன்' எச்சில் நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்'

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"—தமிழ் மறை

தொகுதி 3.	பிரபவ-ஹு சித்திரை-மீ 1927-ஹு ஏப்பிரல்-மீ	பகுதி 4.

திருச்சிராப்பள்ளி: திருக்குறுந்தொகை.

மட்டு வார்குழ லாளொடு மால்விடை
இட்ட மாஉகந் தேறும் இறைவனார்
கட்டு நீத்தவர்க் கின்னரு ளேசெயுஞ்
சிட்டர் போலுஞ் சிராப்பள்ளிச் செல்வரே. (1)

அரி அயன்றலை வெட்டிவட் டாடினார்
அரி யயன்றொழு தேத்தும் அரும்பொருள்
பெரிய வன்சிராப் பள்ளியைப் பேணுவார்
அரி அயன்றொழ அங்கிருப் பார்களே. (2)

அரிச்சி ராப்பகல் ஐவரால் ஆட்டுண்டு
சுரிச்சி ராதுநெஞ் சேயொன்று சொல்லக்கேள்
திருச்சி ராப்பள்ளி யென்றலுந் தீவினை
நரிச்சி ராது நடக்கும் நடக்குமே. (3)

தாயு மாயெனக் கேதலை கண்ணுமாய்ப்
பேய னேனையும் ஆண்ட பெருந்தகை
தேய நாதன் சிராப்பள்ளி மேவிய
நாய னாரென நம்வினை நாசமே.

—திருநாவுக்கரசு சுவாமிகள்.

மருவி வழங்கும் சில சொற்கள்.

மாயூரத்தைச் சார்ந்த ஒரு சிறு கிராமத்தைக் ‘கொறநாடு’ என்றும், ‘குறநாடு’ என்றும் சொல்லுகிறார்கள். முற்காலத்திலாவது, இக்காலத்திலாவது, எக்காலத்திலுமாவது குறவருக்கும் அவ்வூருக்கும் யதொரு சம்பந்தமும் இருந்திருப்பதாகத் தெரியவில்லை. எக்காலத்தும் அந்த இடம் சிறந்த சேலைகள் நெய்யுமிடமாக இருந்து வருவதை எவரேனும் சற்று யோசிப்பாராயின், அவ்வூரின் பெயர்” “கூறைநாடு” தான் என்பது தெரியவரும். [கூறை—சேலை.]

நம் வீட்டு வாசல்களிற்போடும் சிறு கீற்றுத் தாழ்வாரத்திற்குக் “கவர்ணர் தட்டி” என்ற பெயர் வழங்குவதை யாவரும் அறிவர். கவர்னருக்கும் அத்தட்டிக்கும் யாது சம்பந்தம்? மதுரைப் பிரபல ஹைக்கோர்ட் வக்கீல் ஒருவர், இவ்விரண்டையும் சம்பந்தப்படுத்திப் பின்வரும் கதை சொல்லித் தம் போன்றாரைத் திருப்தி செய்துளார்: “சென்னை ராஜதானிக் கவர்னராய் இருந்த ஸர். சார்லஸ் ட்ரவிலியன் மதுரைக்கு விஜயம் செய்த காலத்தில், பெருவீதிகளிலுள்ள வாசற்படிக்கு அடுத்த இடங்களில், அலங்காரார்த்தமாகத் தட்டிப் டந்தல் போட்டுக் கொள்ள முனிசிபாலிடியார் உத்தரவு கொடுத்தார்கள். அது முதல் காரண இடுகுறிப் பெயராக இச்சொல் வழங்கத்தலைப்பட்டது!’ என்பதே அது. மதுரைக்கு கவர்னர் வந்த காலத்தில் அவர் நேத்திரானந்தங் கொள்ள அவ்வூர் முனிசிபாலிடியார் இவ் ஏற்பாடு செய்தால், தமிழ் நாடு முழுதும் இப் பேரையே ஒப்பி ஏற்றன என்பது ஒப்பத்தக்கதா? கேழ்வரகில் நெய் வடிகிறதென்றால், கேட்பார்க்கு மதியிலாமற் போய்விடுமா? இக் கூற்றை அறிவுள்ளோர் அங்கீகரியார்”. “‘காவணத் தட்டி’ என்பது எழுத்தும் பொருளும் அறியாத சிலரால் ‘கவர்ணர்த் தட்டி’ என்று எழுதப்பெற்று, அவர்களினும் ‘மேதவி’களால் அங்கீகரிக்கப்பட்டு இருக்கவேண்டுமென்பது எமது எண்ணம். [காவணம்—பந்தல்]

இன்றும் ‘காற்பலம்’ என்றே பொருள்படும் ‘கஃசு’ என்ற சொல்லை, மலஜலங்கழிக்கும் ‘கக்கூஸ்’ என்ற ஒரு திசைச் சொல்லுக்குப் பதிலாக உபயோகப்படுத்திவரும் முனிசிபாலிடியார்க்கு, உண்மைச் சொல் ஆராய்ச்சியைப்பற்றிய சிந்தனை இல்லாதது போலவே, கவர்ணர் தட்டியைப்பற்றியும் சிந்தனை இல்லாது போனது வியப்பன்றே? (இன்னும் வரும்) —பத்திராதிபர்.

சில குறுந்தொகைப் பாக்கள்.

(ஆங்கில மொழி பெயர்ப்புடன்)

The Love-Songs of the Tamils.

7

ஆலங்குடி வங்கனார்.

[காதற் பரத்தை பாங்காயினர் கேட்பச் சொல்லியது]

கழனி மாஅத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉம் ஊரன்
எம்மிற் பெருமொழி கூறித் தம்மிற்
கையுங் காலுந் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யுந்தன் புதல்வன் தாய்க்கே!

[The courtezan, on seeing the gallant reconciled to his wife]

The lord of lands where the *Vaalai* of the fields
Lives devouring the fruits from the neighbouring tree,
Departing hence swore so fond. But now at home
He to his boy's mother sweetly bows. Is he not but a toy
A dancing doll that holds up its arms and legs
To the bidding of the player who so seeks to please her?

8

மாமூலனார்.

[இது தலைமகள் தன்னெஞ்சிற்குச் சொல்லியது]

கோடீர் இலங்கு வளைநெகிழ நாடொறும்
பாடில கலுழுங் கண்ணொடு புலம்பி
ஈங்கிவண் உறைதலும் உயங்குவம் ஆங்கே.
எழுஇனி வாழிஎன் நெஞ்சே! முனாஅது
குல்லைக் கண்ணி, வடுகர் முனையது
வல்வேற் காட்டின் நன்னாட் டும்பர்
மொழிபெயர் தேத்தா ராயினும்
வழிவிடல் சூழ்ந்திசின் அவருடை நாட்டே!

[The mistress to her mind preparing for an elopement]

It is unbearable living here my heart ! My bracelet of conches
Hardly stays in my hand; and daily weep out
These lustreless eyes. Whilest there we sport
So bless you my heart rise up and resolve
Though bristles the land with spears of *Kullai* wreathed Vadugas
Though foreign the land of *Vel* forests, though alien the tongue
To follow him know to his new chosen abode !

ரா. வாசுதேவ சர்மா, M. A. B. L.,
Lecturer in Sanskrit, National College, Trichy

சிறு நீதிக் கதைகள்.

(86-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

6. நரியும் பாவையும்.

ஒருநாளிரவில், நரி ஒன்று, பொம்மைத்தலைகள் விற்கும் கடைக்குப் போய், ஒரு பொம்மைத் தலையில் காலைவைத்துக் கொண்டு அதை உருட்டிப்புரட்டிப்பார்த்து, ஏதோ ஆலோசித்தது. பின்பு அது "இது மிகவும் அழகாய்த்தானிருக்கிறது. ஆயினும் மூளையற்றது. ஆம்! மூளையில்லையேல் யாருக்கு என்ன உபயோகம்?" என்றது.

நீதி:—விவேகம் இல்லாதவனுக்கும் விளையாட்டுப் பொம்மைக்கும் வித்தியாசமே இல்லை.

7. கருடனும் பன்றியும் பூனையும்.

ஒரு கருடன், ஓர் உயர்ந்த பலாசமரக்கிளையிற் கூடுகட்டி வசித்துக்கொண்டிருந்தது. அம்மரத்தின் சற்றுஉயரத்திருந்த ஒரு பொந்தில், பூனை ஒன்று வாழ்ந்துவந்தது. அதேமரத்தின் அடிவேரண்டை இருந்த ஒரு பொந்தருகில், ஒரு பன்றி தன் குட்டிகளுடன் வசித்து வந்தது. ஒருநாள் பூனை, கருடன் இருக்குமிடம்போய், "என்ன செய்வேன்! ஒரு பெருத்த விபத்து நமக்கு உண்டாயிருக்கிறது: கெட்ட எண்ணமுள்ள பன்றி, இம் மரத்தின்கீழ் வேரை எப்பொழுதும் கல்லியவண்ணமாகவே இருக்கிறது. காரணம் தெரியுமா? இம்மரம் விழுந்துவிட்டால் நம் குஞ்சுகளைச் சிரமமின்றி அது புசித்து விடலாமல்லவா? எவ்வாறேனும் நான் தப்பித்துக் கொள்வேன். உன் நன்மையை நீ நாடிக்கொள்" என்று பதறிக்கூறி அவ்விடம் விட்டகன்றது. பின்பு, அது, கருடன் அறியாமல் கீழே இறங்கிப் பன்றியிடம்சென்று, "அன்ப! இவ்விடம்விட்டு நீவெளியே போகப்போகின்றாயா?" என்ன, பன்றி "ஏனோ இக்கேள்வி?" என்றது. பூனை, "விசேஷமொன்றுமில்லை. உன் நன்மையை நாடியே கேட்டேன். 'பன்றியும் பூனையும் வெளிச்சென்றதும், அவற்றின் குட்டிகளைக்கொணர்ந்து உங்களுக்குத் தருகிறேன்' என்று கருடன் தன் குஞ்சுகளிடம் சொல்லிக்கொண்டிருந்ததை இக் காதால் கேட்டேன். சாமார்த்தியம் இருப்பின், அது அவ்வாறு செய்து பார்க்கட்டும்.—ஆ! ஆ!! அதிகமாகத் தாமதித்துவிட்டேன்! என்

குட்டிகள் பொந்தில் காவலின்றித் தூங்குகின்றனவே!" என்று அஞ்சி நடுங்கியதுபோற்கூறி, அரைக்கணமும் நில்லாது தன் குட்டிகளண்டை சென்றது. பின்பு பூனை, பிற இரண்டும் அறியாமல், இரவில் வெளிச்சென்று, இரை தேடிப் புசித்துப் பகலில் குட்டிகளைக் காப்பதுபோல் அங்குமிங்கும் பார்த்துக் கொண்டிருந்தது. பூனை இவ்வாறு செய்யக்கண்ட பன்றியும் கருடனும், பரஸ்பரம் பகைமை பாராட்டலாயின. இவற்றிற்குள் அச்சமும் விரோதமும் ஏற்பட்டுவிட்டதால், பேதைகளான இரண்டும் வெளிச்செல்லாமலே இருந்தன. முடிவில் அவைகளும் அவற்றின் குட்டிகளும் உணவில்லாமலே இறந்துபோயின. பின்னர், கேட்கவா வேண்டும்? பூனையும் அதன் குட்டிகளும் அவற்றைப் புசித்துத் தின்று திருப்தியடைந்தன.

நீதி :—நலம் புரிவோர்போல் நடித்து நட்புப்பிரித்துத் தாமே நலம் பெறுதல் தந்நயம் கருதுவோர் தன்மையாகும்.

8. கிழவனும் எமனும்

நரை திரை மூப்பு மேலிட்ட ஒரு தொண்டுகிழவன், ஆதரிப்பார் அற்று, விறகை வெட்டியாவது வயிறு வளர்க்கநினைத்து, ஒவ்வொருநாளும் காட்டுக்குச்சென்றான். ஒருநாள், அவன், தான் பிளந்த விறகுகளை ஒன்றாகக் கட்டினான். அதைத் தூக்கமுடியாமல் தூக்கிக்கொண்டு ஊரைநோக்கித்திரும்பினான். அவனுக்குக் களைப்பு மேலிட்டது. சுமையைக் கீழே இறக்கிவைத்துவிட்டு, உட்கார்ந்தான். உட்கார்ந்தவன், உயிரைவெறுத்து வருத்தம் பொறுமல், "ஐயோ எமனே! கொண்டுபோகவரமாட்டாயா?" என்று புலம்பிக் கதறினான். தற்செயலாய் அப்பொழுது அவ்வழியே சென்றுகொண்டிருந்த எமன், கிழவனை அணுகி, "வந்தேன் இதோ. வருந்த வேண்டா. புறப்படு" என்றான். கோரரூபத்துடன் எமன் உண்மையாகவே தன்முன்வந்து அழைத்ததைக் கண்டதும், நடுங்கினான் கிழவன். பிறகுஅவன் சமாளித்துக்கொண்டு, "ஐயா நான் உம்மை அழைத்தது எதற்கென அறிந்திலீர்போலும். இந்தக் கிழட்டுச்சீவனுக்கு உதவிசெய்ய ஒருவருமிங்கில்லை. எப்படியாவது இவ்விறகுக்கட்டு என்வீடுபோய்ச் சேரவேண்டும். இல்லையேல் நான் இன்று பசியால் இறக்கவேண்டியவனே. நல்லவேளையாய் உம்மையேனும் கண்டேன். இவ் விறகுக்கட்டை நான்செல்லுமிடம் தூக்கிச்செல்ல வருமாறு அழைத்ததற்கு, என்னையே நீர் அழைத்தது விந்தை

யினும் விந்தையே. எனக்கு, நீர், நான்விரும்பும் இவ்வுதவிபுரியின், உமக்கு மிக்க புண்ணியமுமுண்டு. உமது வலிமைக்கு இது ஒரு பிரமாதம் இல்லையே!” என்றான். எமன் இதைக்கேட்டு வயிறுவெடிக்கச் சிரித்துச்சென்றான்.

நீதி:—துன்பமுண்டான காலத்தில் உபத்திரவம் மிகுதியால் உயிர்விடத்தயாராய் இருப்பதுபோல் பேசும் வீணர் தாம் தொண்டு கிழவராயும் தொழுநோயால் வருந்துவோராயும் திண்டாடும் காலத்தும், சாகமனங் கொள்ளார்.

9. சிங்கமும் தவளையும்.

சிங்கமொன்று ஒருநாள் நீர்குடிக்க ஒரு குளத்திற்குச் சென்றது. அப்பொழுது அங்கிருந்ததொருதவளை உரக்கக் கத்திற்று. சிங்கம் பயந்து, நாலாபக்கமும் பார்த்தது. “என்னஇது! இங்குஒன்றையும் காணேம். சத்தமோ அடிக்கடி கேட்கிறது” என்று நடுங்கிக்கொண்டு இருந்தது. ஆயினும், அது அதைரியப்பட்டு ஓடாமல் அங்கேயே சிறிதுநேரம் நின்றுகொண்டிருந்தபோது, பழைய தவளை கத்திக்கொண்டே கரையில் தாவிக்குதித்தது. சிங்கம் அதைக்கண்டதும், “அடடா! இவ் அற்பப் பிராணியன்றோ என்போன்ற பெரும்பிராணியை நடுங்கச்செய்தது!” என்றுமிக்க கோபம்கொண்டு விரைந்தோடி அதைக் காலால் அறைந்து நசுக்கிக் கொன்றது.

நீதி:—புல்லறிவாளர் வீண்பயம் கொள்வார்கள். உண்மையறிந்தபின்னரும், தம் கோழைத்தனத்திற்கு நாணாது, தாம் அஞ்சுவதற்குக்காரணராய் இருந்த வலியற்றவர்களை வதைத்தோ, தண்டித்தோதான் திருப்தியுறுவார்கள்.

பண்டித : M. M. நாராயணசாமி ஐயர், முடிகொண்டான்.

கவர்கள், கார்டுகள், பத்திரிகைகள், புத்தகங்கள் முதலிய
பலவித அச்சுவேலைகளையும்,
அதிசீக்கிரமாகவும், குறித்தகாலத்திலும், நேர்த்தியாகவும்,
கிரமமான கூலிக்கும் செய்துகொள்ள விரும்பினல்
திருச்சி கோட்டை
ஜனனுகூல அச்சுக்கூடத்திற்கு
அனுப்புங்கள்.

காலம்

மக்களுடைய ஆயுள், காலத்தாற் கட்டப்பட்டுள்ளது. இவ் ஆயுள் மிகச் சொற்பமானது. தற்காலத்தில்—

மனிதர்க்கு எண்பது வயதே. மற்றதில்
நாற்பது இரவில் நடக்கும் துயிலினால்.
ஒட்டிய இளமையில் ஒரைந்து நீங்கும்.
ஆக்கை யிளமையில் ஐம்மூன்று நீங்கும்
அறுபது செல அவர்க் கிருப்பனக் இருபதே'

இதிலும், உண்ணலுக்கும், உடுத்தலுக்கும். நிவர்த்திக்க வொண்ணாத கஷ்டங்களுக்கும், பிணிகளுக்கும், செல்வது செல்ல, எஞ்சின சொற்ப காலமே நமக்கு வினையாற்றக் கிடக்கின்றது. இச் சொற்ப காலத்திற்குள்தான் நாம் இயற்றவேண்டிய அனைத்தையுமியற்றி, எய்தவேண்டிய அனைத்தையும் எய்த வேண்டியிருக்கின்றது.

காலமானது ஆண்டவனால் மக்கள் யாவருக்கும் ; சமமாக அருளப்பட்டதோர் ஒப்பற்ற செல்வமாகும். அவ்வாறிருந்தும் அதைத் தக்க வழியில் பயன்படுத்தி நல மெய்துவோர் ஒரு சிலரே. பலர் அதனை வறிதே கழித்துவிட்டு, பின்னர் நான் 'அதிர்ஷ்ட ஹீனன். என்று கூறிக்கொண்டு, துக்கசாகரத்துள் மூழ்குவர். இச் சோம்பர் தேம்பித்திரிதல் அடைவேயன்றோ? உலகில் நாம் எய்தக் கூடியசகல நன்மைகளும் காலத்தைச் செலவிடுதலையே பொறுத்திருக்கின்றது. நாம் அனுபவிப்பதற்குக் காலமில்லாவிடின் மற்ற எவையிருந்து என்ன பயன்? 'ஆறிலுஞ்சாவு; நூறிலுஞ்சாவு' என்பதை மறந்து பெரியோரும், சிறியோரும் பலர் தங்கட்குக் காலம் விரிந்துளதென வீண் கனவு கண்டு அதனை வறிதே செலவிடுகின்றனர். இது முற்றிலும் பிழையாகும்.

சென்ற நாட்களைச் சிறு விரல் வைத்தெண்ணுதல் கூடும் நின்ற நாள் யாருக்கும் உணர் வரிது. எனவே அரும்பெரும் பொருள்கள் சம்பாதிக்கக்கூடிய காலத்தை ஓர் அற்பப் பொருளைத்தேடுவதில் செலவழித்தல் மதியீனமாம். நாம் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கும் பொருள்களை ஓரிடத்தில் சிக்கனமாகப் புதைத்துவைத்திருந்து, கோடிக்கோர் வினாடியாகக் கொள்ளுகினும் கொள்ளக்

கிடைக்காத அருமையும் பெருமையுமுடைய ஆயுட் காலத்தை எவ்வகையிற் செலவிடினும் அதை மீண்டும் எய்துதல் இயலாது. காலத்தின் அருமையை,

"இழந்த பொருள் நல்லுழைப்பின் எய்தலாம் என்ப;
இழந்த சுகம் இன் மருந்தின் என்ப;—இழந்த அறி(வு)
எய்தலாம் கல்வியினல் என்ப; இழந்த நாள்
எய்துவதோ எக்காலும் இல்"

என, 'அரும் பொருட்டிரட்டு'ச் செய்யுள் ஒன்று வெகு அழகாக எடுத்துக்கூறுகின்றது.

நாடோறும் கதிரவன் எழுந்து, மறைந்துவிடுகின்றதைக் காண்கின்றோம். இதனைப் பலர் அலட்சியமாகக் கருதுகின்றனர்.

"தோற்றஞ்சால் ஞாயிறு நாழியா வைகலும்
கூற்றமளந்து நும் நாளுண்ணும்"—

என்பதை யிவர்கள் உணர்கின்றார்களில்லை. காலச் சக்கரமோ ஓடிக்கொண்டே யிருக்கிறது. நாட்கள் பறக்கின்றன. ஒளியின் வேகமும் அதன் வேகத்திற் கொப்பாகாது. தினந்தோறும் புதிய ஒளி வந்து புதிய ஊக்கத்தை யூட்டுகின்றது. ஒவ்வொரு நாளும் உயிரின் பகுதியாமன்றோ? நாம் வீண் கழிக்குங் காலந்தான் கழிவதுடன் நமது வன்மையையும் ஆயுளையுமன்றோ உடன் கொண்டுபோய் விடுகின்றது! இங்ஙனமுள்ள காலத்தினருமையையும் வாழ்நாளின் நிலையின்மையையும், உணர்ந்தன்றோ ஒருவர்,

* * * * "இடிகரை
வாழ்மர மொத்தது வாழ்நா ளாதலால்,
ஒன்றே செய்யவும் வேண்டும் அவ்வொன்றும்
நன்றே செய்யவும் வேண்டும்; அந்நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும்; இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும்; இன்னும்
நாளை நாளை யென்பீ ராகில்
நமனுடை முறைநாள் ஆவது மறியீர்;
நமனுடை முறைநாள் ஆவது மறியீர்;"

எனத் திறம்படக்கூறிச் சென்றனர்.

(இன்னும் வரும்)

சே. ரா. கணபதி சுப்பிரமணிய ஐயர்,
தமிழாசிரியர், போர்ட்ஹைஸ்கூல், கொள்ளேகால

மாண்டவன் மீண்ட மாயம்.

இருபத்தேட்டாவது அத்தியாயம்.

புதுமாதிரி.
Quite A New Case.

கைலாசம் தான் படித்த கடிதத்தை மடித்து மேஜைமேல் எறிந்துவிட்டுப் பெருமூச்சுடன் தான் அமர்ந்திருந்த நாற்காலியில் சாய்ந்தான். உலக அமைப்பும் அதன் கதியும் மனிதனுடைய புத்திக்கெட்டாதபடி மாயமாயிருக்கின்றனவென்றும், தான் சிறு வயதில் புராண இதிகாசங்களில் படித்துள்ள பிரபஞ்சமாயா விலாசமெலாம், பிரகிருத ஸமாசாரத்தில் உண்மை எனத் தீர்மானிக்கப் பட்டதாகவும் உணர்ந்தான். தன் நண்பன் ராமஸ்வாமியின் தகப்பனார் உயிருடன் இருப்பதாகக்கேட்டு மிகவும் சந்தோஷித்து "என்ன ஆச்சரியம்! என்ன நினைக்க என்ன முடிந்தது? நடந்தது ஒன்று. ஊரார் ஸம்சயித்ததொன்று. இவையெல்லாம் யார் செயல்? நாம் விசாரிப்பதாய்க் கைக்கொண்ட கேஸின் உண்மையும், தன்மையும், முற்றிலும் வேறுவிதமாய் மாறிவிட்டது. சோமுவின் மரணத்துக்கு என்ன காரணம் சொல்லலாமோ அவைகளையே கொண்டு தர்மராஜுவின் மரணத்தைக் கற்பிக்கலாகாது. 'திருத்தப்போய் தோப்பரை வளையமாய் முடிந்ததுபோலாயிற்று விஷயம்" என்று கருதினான்.

கைலா:—"ராமஸ்வாமி! இந்தக் கடிதம் வேடிக்கையாயிருக்கிறது. ஆனால் மொட்டையாய் முடிந்திருக்கிறது. நீ உன் தகப்பனாரை, மறுபடி பார்த்தால் எல்லாம் சொல்லுவார் என்று நினைக்கிறேன்."

ராம:—"(மனங்கலங்கித் திகைத்து) இனிமேல் மறுபடியும் என் தகப்பனாரைப் பார்ப்பதாக எனக்கு எண்ணமில்லை"

கைலா:—"ஏனப்படிச் சொல்லுகிறாய்?"

ராம:—"இருபது வருஷகாலமாய் என் தாய் தந்தையர் இறந்ததாக எண்ணியிருந்தேன். உலகத்தில் பெற்றோர்க்கும் பிள்ளைகளுக்கும் இயற்கையாயுள்ள வாத்ஸல்யத்தை நான் அனுபவிக்கும்படி இதுவரை பாக்கியஞ் செய்யவில்லை. இனியும் இதுவரை இருந்தபடியே இருந்துவிடுகிறேன். அவர்கள் உயிருடன் இருக்கும் செய்தி அறிந்ததே எனக்குப் பரமதிருப்தி."

கைலா:—"என்ன இப்படிச் சொல்லுகிருய்? அவர்கள் உன் தாய்தந்தையரல்லவா?"

ராம:—" (ஆவலுடன்) நீ சொல்லுவது வாஸ்தவந்தான். ஆனல் என் மனம் ஸமாதானப்படவில்லை. ஆயினும் என் தகப்பனை மாத்திரம் இன்னொருமுறை பார்த்துவிட்டு—"

கைலா:—"அவசியம் பார்க்க வேண்டியது தான்."

ராம:—"எதற்காக?"

கைலா:—"அவர் உன் பிதா. இரண்டாவது இவ் விஷயத்தில், இனி ஒரு முயற்சியும் செய்வதில்லை என்று சொல்லி அவரைச் சமாதானப்படுத்த வேண்டியது உன் கடமை. நீ ஆரம்பித்த காரியம் முடிந்துவிட்டது. உன் தகப்பனர் மரணத்துக்குப் பழிவாங்குவது உன் எண்ணமானலும் இவ் அயோக்ய தர்மராஜுவின் கொலையைப்பற்றி உனக்கு ஒரு விசாரமுமில்லை.—"

ராம:—"ஆமாம் வாஸ்தவமே. இனி இந்தக் கேஸை இப்படியே நிறுத்தி விடுவதாகத்தான் என் எண்ணம். ஆனல் உன் எண்ணம் என்ன?"

கைலா:—"என் எண்ணமும் அப்படித்தான். வரவர மாயம் அதிகப்படுகிறதே யொழிய, ஒன்றும் சரியாய்த் தெரியவில்லை. முடிவிலும் மாயமாய்த் தான் முடியும். ஆனல் அந்தத் தர்மராஜுவைக் கொன்றது யாராய் இருக்கலாம்?"

ராம:—"அதை நாம் எவ்விதம் அறிய முடியும்?"

கைலா:—"உன் தாயார், தகப்பனர், சங்கரன் இம்மூவர் மேலும் குற்றமில்லை. ஏனென்றல் கொலை நடந்த காலத்தில் அவர்கள் வீட்டுக்குள் இருந்து விட்டார்கள். பாக்கி யிருக்கிறவர்கள் சீதையும் சிதம்பரமும். இவர்களே வெளியே இருந்தவர்கள். ஆகையால்—"

ராம:—"சீதை தன் காதலனையே கொல்வாளா?"

கைலா:—"சீதை தர்மராஜுவைக் காதலித்தது வாஸ்தவம் தான்—ஆனல்—அன்றிரவு தர்மராஜுவும், உன் தாயாரும் உத்ஸவத்துக்குப் போய்த் திரும்பி இருக்கிருர்கள். சீதை கோபத்தால் ஏதாவது செய்திருக்கலாம். பிறகு தப்பித்துக்கொள்ளும்பொருட்டு ஓடியிருக்கலாம். ஒன்றும் தெளிவாய் விளங்கவே இல்லை. நீ உன் தகப்பனரைப் பார்த்துவா. பின்பு ஆலோசித்துக்கொள்வோம்"

ராம:—" ஆமாம்! அப்படியே செய்கிறேன். என் தாயார் உயிருடனிருக்கும் சமாசாரமும் அவருக்குத் தெரிவிக்கிறேன். ஆனல் சிதம்பரம் அந்தச் சமாசாரத்தை என் தகப்பனரிடம் ஏன் சொல்லாமல் இருந்தார்?"

கைலா:—"அந்த மனுஷ்யர் இரண்டுபேர்களுக்கும் நல்லவராக நடந்துகொண்டு விட்டார். உன் தாயாரும் அவரைப் புகழ்கிருள். உன் தகப்பனரோ சொல்லவேண்டியதில்லை இரண்டு பேரையும் அவர் ஏமாற்றி வந்திருக்கிருர்."

ராம:—"எப்படி?"

கைலா:—"உன் தாயார் இறந்துவிட்டதாய் உன் தகப்பனருக்குச் சொல்லியிருக்கிருர். உன் தகப்பனர் கொலை யுண்டதாய் உன் தாயார் நினைத்துக்கொண்டிருக்கிருள்."

ராம:—"எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. என் தகப்பனரைப் பார்க்கிறேன். உன்னுடைய கிறுக்குமுத்தன் சற்றுமுன் எழுந்திருந்திருந்தால் எல்லாம் வெளியாயிருக்கும். சனியன் போகிறது. அது எனக்கு இப்பொழுது விசாரமில்லை. ஆனல்—"

கைலா:—"சரி! இனி எவ்வளவு நேரம் பேசினலும் பேசினதைத் தானே திரும்பத் திரும்ப பேசப்போகிறேம். ஆகையால் நீ உன் தகப்பனர் ஜாகைக்குப் புறப்படு"

ராம:—"நீயும் வரலாமா?"

கைலா:—"நான் எதற்கு?" (சற்றுயோசித்துவிட்டு) "சரி! நீ போய்ப் பேசிக்கொண்டிரு. நான் இன்னும் அரைமணி நேரத்தில் வந்து சேருகிறேன்."

ராம:—"அப்படியே ஆகட்டும்"

பிறகு இருவரும் பிரிந்தனர். கைலாஸம் அரைமணி நேரத்துக்குள், சம்பு வாசஞ் செய்த மடத்தண்டை வந்து சேர்ந்தான். தோட்ட வாசலில் நின்றுகொண்டிருந்த பலராமனைப் பார்த்து "எதப்பா! இன்று மிகவும் உற்சாகமாயிருக்கிருயே" என்று கேட்டான்.

பல:—" (புன்னகைகொண்டு) எல்லாம் உங்கள் தயவுதான்"

கைலா:—" (உள்ளே இருவரும் செல்லுகையில்) ரொம்ப சந்தோஷம். சரி. எல்லாம் விசாரித்துக்கொண்டேன். அந்தத் தர்மராஜுவைக் கொன்றதுதான் யார்?"

பல:—“நான் என்னத்தைக் கண்டேனையா? அதோ எரிஞ்சு போருனே அந்தச் சூரிய பகவானுக்குத்தான் தெரியும். எஜமாங்க கூப்பிட்டாங்க. நான் விளக்குக் கொண்டுபோனேன். ஆனா அந்தப் பய மகா அயோக்யன்தான். என் தங்கையையும் கெடுத்தான். என் குடும்பத்துக்கே அவமானத்தையும் தந்தான் பாவி. தானுந் தொலேஞ்சான். அவளுந் தொலேஞ்சா. அதோடே போச்சு.”

இதற்குள் இருவரும் மடத்தண்டை வந்து சேர்ந்தார்கள். அங்கே ராமஸ்வாமியும், அவன் தகப்பனரும் பேசிக்கொண்டிருந் தார்கள். கைலாஸம் நெருங்கினவுடன், சோமு, “வா அப்பா! கைலாஸம்! நீ ராமஸ்வாமிக்குச் செய்த உதவியைப்பற்றி நிரம்ப சந்தோஷப்படுகிறேன். இதற்குமுன் நீ வந்தபொழுது நான் உன் னுடன் சரியாய் நேரில் பேசவில்லை யென்று வருத்தப்பட்டுக் கொள்ளாதே” என்ருர்.

கைலா:—“(சிரித்துக்கொண்டு) அதனுல் என்ன? உங்கள் நிலைமையில் யாரும் அப்படித்தான் செய்திருப்பர். ஏதோ போகட் டும்—இதோடு உங்கள் கஷ்டமெல்லாம் நிவர்த்தியாயிற்று”

சோமு:—“(சற்று மனச் சந்தோஷத்துடன்) நிவர்த்தி ஆயிற்று என்று எப்படிச் சொல்லமுடியும்? என் ஆயுள் உள்ளவரை இப்படி யேதா னிருந்து தீரவேண்டும். என்மேலுள்ள சந்தேகம் நிவர்த்தி யாகப் போகிறதில்லை. ஏதோ உன் உதவியிருந்தால்—”

கைலா:—“தடை என்ன? என்ன செய்யவேண்டும்? ஆனல் இன்னும் விசாரிப்பதாய்த் தங்கள் அபிப்பிராயமோ?”

சோமு:—“ஸந்தேகம் தீர்ந்து விட்டால் நல்லதுதானே? உன் அபிப்பிராயமென்ன?”

கைலா:—“எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. கொலே யுண்டது தாங்கள் என்றே இதுவரை எண்ணியிருந்தோம். இப் பொழுது தாங்கள் உண்மையான பெயரை வைத்துக் கொண்டு வெளிப்படுவீர்களானல் இறந்தது தர்மராஜு வென்று ஏற்படும். உடனே கேஸ் போலீஸ் விசாரணைக்கு வரும். கிரிமினல் விஷயங் களில் காலாவதி என்பதே கிடையாது. இயற்கையாய் உங்கள்மீது தான் சந்தேகம் ஏற்படக்கூடியது. மேலும் தங்கள் தோட்டக்கா ரன் கிறுக்குமுத்தன் வாக்குமூலமே தங்களுக்கு விரோதமாய் முடியும்.”

இதற்குள் ராமஸ்வாமி சற்று வெளியே சென்றான்.

சோமு:—"நீ சொல்லுவது உண்மைதான். இன்னொரு விஷயம்: என் மனைவி உயிருடன் சிதம்பரம் ஸம்ரக்ஷணையி லிருப்பதாக ராமஸ்வாமி சொன்னான். அதற்காகத்தான் அவன் இல்லாத போது கேட்கிறேன். அதனால் என்ன தோன்றுகிறது?"

கைலா:—"நான் என்ன சொல்ல முடியும்? ஏதோ நீங்கள் தான் ஊகித்துக்கொள்ளவேண்டியது."

சோமு:—"ஆகா! அவளுக்காகத்தான் சிதம்பரம் இதுவரை என்னை ஏமாற்றிவந்தானோ?"

கைலா:—"அப்படித்தான் தோன்றுகிறது. அவர் உங்களிருவரையும் சேரவொட்டாமல் ஏமாற்றி வந்ததால், அவர் அயோக்யதை வெளியாகிறது. மேலும், இந்தக் கேஸ் விசாரணையில் அவரால் கூடியவரை உங்களுக்கு கெடுதி செய்துவந்தார்."

சோமு:—"அப்படியா?—காரணம்?"

கைலா:—"என் அபிப்பிராயம், கொலை செய்தது சிதம்பரமாகத்தா னிருக்கவேண்டும் என்பதே"

சோமு:—"(சற்று யோசித்துவிட்டு) இருக்கலாம். ஏன் இருக்கக்கூடாது? அவன் அன்றிரவு தோட்டத்தி லிருந்திருக்கிறான். என் மனைவிமேல் அவனுக்குக் காதல் இருந்திருக்கலாம். தர்மராஜுவைத் தொலைத்துவிட்டால் அவள் தனக்குப் பூரா ஸ்வாதீனந் தானே?—ஆமாம். இப்போது எல்லாம் சரியாய்த்தெரிந்துவிட்டது. என் மனைவிமேல் அவனுக்குக் காதல்தான். எவ்விதமாய்த் தர்மராஜுவைக் கொன்றிருப்பானோ? அது தெரியாது. அவன் கொன்றது வாஸ்தவம்தான்."

கைலா:—"அது தவிர நாவலில் சொல்லியிருக்கிறதே பொடி டப்பி—அதன் ஸமாசாரமென்ன?"

சோமு:—"டப்பி சிதம்பரத்தினுடையதுதான். நான் தான் கொடுத்தேன். கும்பகோணம் டப்பி. தாமரைப்பூ நகாசு வேலை செய்தது—சங்கரன்தான் தோட்டத்தில் கண்டெடுத்தான். ஆனால் நான் நிச்சயமாய்ச் சொல்ல முடியாது."

கைலா:—"எல்லாவற்றிற்கும், மதுரைக்கு வந்து தங்கள் ஸம்ஸாரத்தைப் பாருங்கள். பிறகு ஆலோசித்துக்கொள்வோம்."

சோமு தம் முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு சற்று நேரம் ஆலோசித்துவிட்டுக் கடைசியாக "சரி" என்றார்.

இருபத்தொன்பதாவது அத்தியாயம்.

சோமுவும் பாலாம்பாளும்,
Somu & Balambal.

மறுநாள் $4\frac{1}{2}$ மணிக்கு மதுரைக்குப் போகும் ஷட்டில் வண்டியில், சோமு, கைலாஸம் ராமஸ்வாமி ஆகிய மூவரும் பிரயாணம் செய்து கொண்டிருந்தனர். வண்டி சமயநல்லூர் ஸ்டேஷன் விட்டுப் புறப்பட்டதும், பக்கத்தில் எவருமே இல்லையென்று அறிந்து கொண்ட

சோமு:—"கைலாஸம்! சிதம்பரத்தைப்பற்றிய எண்ணத்தை மாற்றவேண்டி வருகிறது. அவரது செய்கைகளை ஆராய்ந்து கவனித்தால் நீ கொள்ளும் சந்தேகத்திற்கு இடமே இராது. "மங்களபுரம் கொலை" யைப்பற்றிச் சிதம்பரம் சொல்லும்வரை ராமஸ்வாமிக்குத் தெரியாமல் தானே இருந்திருக்கிறது? தாம் கொலை செய்திருந்தால், தாமே அதைப்பற்றி வெளியிடுவாரா?"

கைலா:—"அது தெரியாமலா இருக்கிறது? சிதம்பரம் தான் கேஸ் கட்டை முதல்முதல் ராமஸ்வாமி கையில் கொடுத்தது—ஆனல்—பாலாம்பாளால்— சிதம்பரம் அப்படிச் செய்ய நேர்ந்தது."

சோமு:—"எப்படி?"

கைலா:—அவள் "விதியின் பயன்" என்ற 'நாவ'லை வாசித்தாள். அதில் "மங்களபுரம் கொலை" கதையாக எழுதப்பட்டிருந்தது. பெண்புத்தி சபலமானதால் ராமஸ்வாமிக்கு அதைப்பற்றி முழுமையும் சொல்லிவிடுவதாய் எண்ணி எழுதினள். இது சிதம்பரத்துக்கு தெரிந்தது—சிதம்பரம் முந்திக்கொண்டு நல்லவராயினர்."

ராம:—"அவர் நேரே சொல்லவில்லை. அந்தப் பத்திரிகைகளைப்படித்துத் தெரிந்துகொள்ளச் சொன்னர். எல்லாவற்றிற்கும் காரணம் சங்கரிதான். சங்கரி ஸபாபதிக்குச் சொல்லியிராவிட்டால் சபாபதி இந்த 'நாவல்' எழுதியிருக்கமாட்டான். பாலாம்பாளும் எனக்குக் கடிதம் எழுதியிருக்க மாட்டாள். சிதம்பரமும் கட்டைக் காட்டியிருக்க மாட்டார்."

சோமு:—"ஆதலால் சிதம்பரம் வெளியிட்டது மனப்பூர்வமாயில்லை என்பது உன் எண்ணம்?"

கைலா:—"அது என் அபிப்பிராயம்."

சோமு:—"சரிதான்!—ஆனால் என்னைப் பார்க்கும்படி ஏன் அவர் ராமஸ்வாமிக்குப் போதிக்க வேண்டும்? நாங்கள் சந்தியாமல் இருப்பதே அவருக்கு நலமல்லவா?"

கைலா:—(சிதம்பரத்தின்மேல் வெறுப்புடன்)"அதுவும் அவசியமாகத்தான் ஏற்பட்டுவிட்டது. எப்படியாவது இதைக் கடைசிவரை விசாரித்தே தீருவதென்று நாங்கள் சபதம்செய்திருக்கிறோம் என்று அவருக்குத் தெரியும். தங்களையும், ராமஸ்வாமியையும் நேருக்குநேரே சந்திக்கச் செய்துவிட்டால் எல்லாம் நின்றுபோய் விடுமென்றுதான்"

சோமு:—"அவனது எண்ணம் எப்படி நிறைவேறக்கூடும்?"

கைலா:—"எப்படியா? தாங்கள் உயிரோடிருப்பதை யறிந்துவிட்டால், அதற்குமேல் ராமஸ்வாமி இந்த விஷயத்தில் முயற்சி செய்யமாட்டானல்லவா?"

சோமு:—"ஓஹோ! சரிதான்! அப்படியானால் அவன் இன்னொரு விஷயத்தை,—அதாவது நான் என் மனைவியைப் பார்க்க விரும்புவேன் என்பதைக்—கவனிக்கத் தவறிவிட்டான். நான் இனி இப்படியே சம்பு என்ற பெயருடனே இந்த மடத்தில் காலம்கழிக்கப்பட்டவன் என்றும், என் இருப்பை என் மனைவிக்குக் கூடத் தெரிவிக்கப் பயப்படுவேன் என்றும், அவன் நினைத்திருக்கலாம்—அதுவும் சரிதான். இப்போது ராமஸ்வாமியின் கட்டாயத்துக்காகத்தானே போகிறேன். நாங்கள் இருவரும் சந்தித்துவிட்டால் எல்லாம் வெளியாய் விடும்."

கைலா:—"இதில் என்ன வெளியாக வேண்டியிருக்கிறது? தர்மராஜுவைக் கொன்றது சிதம்பரம்தான். கிறுக்கு முத்தன் சற்று முன் விழித்திருந்தால்—"

ராம:—"சிதம்பரம் கொலை செய்யக் காரணம்?"

ராமஸ்வாமியும் சோமுவும் பரஸ்பரம் முகத்தைப் பார்த்துக் கொண்டார்கள். இதற்குப் பதில் சொல்வதென்றால் ஜானகியம்மாள் நடத்தைப் பிசகைப்பற்றிச் சொல்லவேண்டியிருக்கும். அப்படி, கன் பிள்ளை இடத்திலேயே அவன் தாயரைப்பற்றிச் சொல்

வந்து அவ்வளவு நன்றுயிராது. ஆகையால் சோமு சற்றுயோசித்து "அதைத் தான் அறியவேண்டும். இதில் எவ்வளவோ வஞ்சகம் நடந்திருக்கிறது நமக்குத் தெரியாமல்." என்றார்.

ராம:—"ஒரு வேளை சீதையே செய்திருப்பாளோ?"

சோமு:—"ஏது! எனக்குத் தோன்றவில்லை. ஸ்திரீ ஜாதிக்கு அவ்வளவு துணிச்சல் இராது—ஆனால் ஒரு வேளை இருந்தாலும் இருக்கலாம். கைலாஸம் சொல்லுகிறபடி சிதம்பரமே கொலை செய்தாலும் செய்திருக்கலாம். சீதை நல்லவள். தெரியாத்தன மாய் தர்மராஜா வலையில் சிக்கிக்கொண்டாள். தன் தமயனுக்குப் பயந்து மதுரைக்குப் போனாள். அங்கே சங்கரியைப் பிரசவித்து—"

கைலா:—"சங்கரி சீதையின் மகளா?"

சோமு:—(புன்னகையுடன்) "ஆமாம். அவளுடைய மகளே."

கைலா:—"சிதம்பரந்தானே தங்களிடம் அவளைக் கொண்டு வந்தது?"

சோமு:—"ஆம்! அவள் குழந்தையா யிருக்கையிலேயே அவள் தாயார் இறந்துபோனாள். பிறகு சிதம்பரம் அவளை எங்க ளிடம் கொண்டுவந்து சேர்த்தார். அவள் மாமன் சங்கரன் என் னிடம் இருப்பதால் அவளை நாங்கள் அருமையாய் வளர்த்து வந் தோம். இன்றும் நானே அவளுக்குத் தகப்பனார் என்று அவள், நினைத்திருக்கிறாள்."

வண்டி மதுரை வந்து சேர்ந்தது. மூன்று பேரும் விரைவில் பாலாம்பாள் ஜாகை வந்து சேர்ந்தார்கள். ராமஸ்வாமி முன்ன தாகவே இறங்கித் தன் தாயாரிடம் தகப்பனார் வரவைத் தெரிவிக் கச் சென்றான். சோமுவும் கைலாஸமும் சற்றுப் பின்னே சென்றார் கள். பாலாம்பாள் ஜன்னல் வழியாய், இம்மூவர் வரவையும் பார்த்துவிட்டாள். பாவம்! அவள் முகம் எவ்வளவு துக்கமடைந் தது! ஏதோ விபரீதகாலம் கிட்டிவிட்டதென்று உணர்ந்தாள். ஆனாலும மனத்தைத் தைரியப்படுத்திக்கொண்டு, அவர்கள் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். சோமுவும் கைலாஸமும் உள்ளே நுழைந்தார்கள். பாலாம்பாள் பரபரப்புடன் சோமுவை விழித்துப் பார்த்தாள். சோமு பாலாம்பாளை பார்க்கவே, பிரமித்து, "சீதா! நீ இன்னும் உயிரோடிருக்கிறாயா?" என்று ஆச்சரியத்துடன் வின வினார்.

R. S. நாராயணசாமி ஐயர் B.A., B.L.

பராந்தகன்.

இரண்டாங் காட்சி.

இடம்:—காமராஜபாண்டியன் அரமனையிலுள்ள ஓர் அந்தரங்க அறை.

பாத்திரங்கள்:—அவனுடைய அந்தரங்கத் தோழர்களும் ஆட்களும்

[இரவு பயங்கரமாய் இருண்டும், பேய்க்காற்று அடித்துக் கொண்டும் இருக்கிறது. காமராஜபாண்டியன் தன் அரமனையில் நண்பர்களின் வரவை விரும்பி எதிர் பார்த்தவண்ணமாயும் கவலைக்குறியுடனும் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். விளக்கொன்று மினுக்கு மினுக் கென்று எரிந்துகொண்டிருக்கிறது]

காம:—மணி பதினொன்று ஆகப்போகிறது. எட்டு மணிக்கே எல்லாச் சனியன்களையும் வரச்சொல்லியும் இதுவரையில் ஒரு பயல்கூட வரவில்லையே! ஆனால் என் சங்கடமும் ஆத்திரமும் அவர்களுக்கு எங்கே தெரியப்போகிறது? இருந்துபார்ப்போம் இன்னும் கொஞ்ச நாழிகை. [தங்கமுத்து வருகிறான்.]

இத்தனை நாழிகை கழிச்சாவது தேவருக்குவர மனம் வந்ததே. எத்தனை நாளாச்சு உம்மைப் பார்த்து? நீரே சொல்லும்.. என் னென்னவோ சாதிக்கிறதாக நீர் சொன்னதுதான் மிச்சம்போலே இருக்கு. ஊர்ப்பட்ட பணச்செலவுதான் இதுவரை நான்கண்டது.

தங்:—மாராசாவுக்குத் தெரியாதது ஒண்ணுமில்லே. இந்த நாக் குட்டி உளெக்கிற உளெப்பு, சாமிக்குத்தான் தெரியும். வடிவேல் அறிய வஞ்சகமில்லே. நான் என்ன செய்யட்டும்? வேளையும் போதும் அம்பளுக்கு இன்னும் வல்லியே. நாசமாப்போற பசங்களெக் கண்டுபுடிக்க எம்பிட்டெம்பிட்டு ஆளுகளெ அனுப் பிச்சிருப்பேன் தெரியுமா? அதுக்காக எம்பிட்டெம்பிட்டுப் பணம் செலவளிச்சிருப்பேன்? அம்பிட்டுப் பசங்களும் செத்துத் துலேஞ் சுச் சுண்ணும்பாவில்லே போய்ட்டாங்க போலிருக்கு?

காம:—ஆரைச் சொல்றீர்?

தங்க:—ஆரை? மாயாண்டி வகையராக்களேத் தான்.

காம:—இது சொல்ல உமக்கு இத்தனை நாளாச்சாக்கும்? போகட் டும்: எட்டு மணிக்கு எல்லாரையும் வரச்சொல்லி இருந்தேனே, இப்போ மணி என்ன பாத்தீரா?

தங்க:—பதினோருமணி ஆகப்போகிறது. என்ன செய்யச் சொல்றீக? மாராசா காரியமாத்தான் மறுபடியும் தம்பிரான் சாமிகிட்டப் போயிருந்தேன். அம்ப சாமிசேதி தெரியாதா? சாமிக்குப் புதுச்சிறை ஒண்ணு இன்னிக்கிக் கெடச்சிருக்கு. சின்னக் கார்வாரு, "சாமி வரும்; வரும். இருங்க; இருங்க. அப்படி அவசரமாயிருந்தா இன்னொருநா சாவகாசமா வாங்க பாத்துக்குவம்" இண்டு தாச்சணியமில்லாமே சொல்லிக் காக்கப் போட்டுடிச்சு. அப்புறம், ஒரு ஆசை வார்த்தை சொல்லி, சாமியை வரவளச்சேன்.

காம:—சரி. அங்கே தேவர்போன காரியம், காயா பளமா?

தங்க:—தனபாலன் இன்னும் சாகல்லியாம். ஆனா முத்து மட்டும் நான் சொல்லியப்படி சாமிக்கு நடத்திட்டானும். சாமியே எங்கிட்டச் சொல்லிச்சு. சாமி மேக்கொண்டு, அம்பளுக்குச் சொல்லாமலே ஒரு அகாத வேலை செஞ்சிருக்காம்: ஒரு வாரம் பத்து நாளைக்குள்ளே முளுச்சேதியும் முடிவும் தெரியுமாம்: புதுப்பய ஆரோ அரமனை வேலேலே அமரப்போரானும். "அவன் சம்பந்தமாகத்தான்" இன்னு சாமி சொல்லிச்சு. அம்பளுக்கெல்லாம் அவன் பெரிய விரோதி இண்டும் காமராசாவுக்கும் தனகும் கவலையே இல்லாமே காரியத்தை முடிக்க என்னென்ன ஏற்பாடோ செஞ்சிருக்கிறதாகவும் சாமி சொல்லிச்சு.

காம:—தேவரே! ரொம்ப சந்தோசம். தாமசிச்சாலும், நல்ல சேதி கொண்டு வந்திர். பட்டங் கிடைச்சவுடனே சொன்னதுக்குமேலே சாமிக்குச் செஞ்சிடுவோம். நீர் முத்துவையும் கூட்டியாந்திருக்கலாம்.

தங்க:—மாராசா! சொல்லவாவேணும்? அந்தப்பய ஒரு அசட்டுப்பய. அம்ப காரியத்திலே அவன் அறியவேண்டியது மிருக்கும். அறிஞ்சுக்கக் கூடாததும் இருக்கும். அதனாலேதான் அவனைக் கையோடே கூட்டியாரல்லே. இருந்தாலும், அவனை வரச்சொல்லித்தான் வந்திருக்கேன். அவன் சுத்தப் பயங்குளி. அவனை அம்ப சொல்றபடி எல்லாம் ஆட்டிவைச்சு எமபுட்டும் பிடுங்கிக்கலாம்.

[ஆனையப்பன் வருகிறான்.]

காம:—ஆனையப்பா! ஏது இவ்வளவு சீக்கிரம் வந்துவிட்டாய்?

தங்க:—(சிரித்துக்கொண்டு) இப்பத்தான் அவுக கடியாரத்திலே மணி எட்டு ஆச்சுப்போல இருக்கு.

ஆனை:—தேவரே! வெட்டிப்பேச்சுப் பேச இது சமயமில்லே. இந்த மட்டாவது வந்தேனே இன்னு திருப்தி அடையும். "வாரதாகக் காமராசாவிடம் ஒப்புத்துக்கிண்டோமே; வாராட்டி நீரும் விடமாட்டீரே" இன்னு வந்திருக்கேன். இப்போ நான் சொல்ற சேதியைச் கேளும்: அப்புறம் என்ன சொல்றேகளோ அதைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அன்னிக்கி நான் ஒப்புத்துக்கிண்டபடியே, எங்க ஐயோ, வாயெக்கட்டி வயத்தெக்கட்டி மறைச்சு வச்சிருந்த இரண்டு பைப் பணத்தையும் அமிக்கிக்கிட்டு ரொம்ப ஜாக்ரதையாய்ப் புறப்பட்டேன். என்னுேடே வந்த மூனுபேரிலே, ஒத்தன், கொஞ்சதூரம் வந்ததும், எக்கச்சக்கமான ஒரிடத்தில் என்னை வழிமறிச்சு நிறுத்தி, அடிச்சான் கண்ணிலே மண்ணை வாரி. "ஐயோ! அப்பா!" இன்னு கத்தினேன். கத்தி என்ன பிரயோஜனம்? பறிகொடுத்து விட்டேன் பைகள் ரெண்டையும். வந்த பயங்க மறைஞ்சுட்டாங்க மாயமா. இரண்டு மணிநேரம் ஆச்சு. கொஞ்சம் கண்ணெத்திறக்க. முதவிலெ ஒரு சொம்புதண்ணி கொண்டாங்க கண்ணெக் கழுவ'

[தங்கமுத்து தண்ணீர்தர ஆனையப்பன் கண்ணைக்கழுவுகிறுன். முத்து வருகிறுன்.]

காம:—என்ன முத்து, எங்கே வந்தே?

முத்து:—"மாராசாவைப்பார்த்து எத்தனை நாளாச்சு? ஏன் நீ போகலலே" யிண்டு, தேவர் ரொம்ப ரொம்பக் கோபிச்சாரு. உடனே ஓடி வரச்சொன்னுரு. தம்பிரான்சாமியை எப்படியாவது திருப்தி செஞ்சபொறகுதான் மறுகாரியம் பாக்கரதிண்டு தீர்மானிச்சு, ஏதோ இந்தவிசை நெறைவேத்தி விட்டேன். சீக்கிரத்திலே காமராசாவுக்குப் பட்டங்கிடைக்கப் போகிறதுண்டு தம்பிரான் சாமி சொல்லிச்சு.

காம:—நல்லது. ரொம்ப சந்தோஷம். உட்காரு இப்படி—சரி மணி பன்னெண்டு ஆயிடுத்தே. தினகரன் இனிமேல் வருவனு? அவன் ஒரு பொண்டு புடிக்கி. அவனை நம்பவே படாது. எங்தச்சிறுக்கியின் காலடியைச் சுத்திக்கிண்டு இருக்கானே? மாயாண்டி ஆளுக இருக்கிர இடம் அவன் எங்கே கண்டுபிடிக்கப் போகிறுன்? ரொம்ப நாளியாச்சு. வாங்க படுக்கப் போவோம். முத்கு! வாசக்கதவை நல்லாத் தாழ்ப்பாள் போட்டுட்டு வா.

[முத்து தாழிட்டுத் திரும்புகிறான். கதவிடிக் கப்படுகிறது. மீண்டும் முத்து திறக்க தினகரன் வருகிறான்.]

காம:—தினகரா! உனக்கு நல்ல வேட்டைபோல் இருக்கு. இந்த மட்டும் விட்டாளா உன்னை நீ வேண்டிப் புடிச்சவ?

தின:—எப்போதும்போல விளையாட இது சமயமல்ல.—பிராந்தி ஏதாவது மிச்சம் கிச்சம் இருக்கா? இல்லையா?

காம:—என்னசேதி? உனக்கென்ன கேடு வந்திருக்கு? சொல்லி அழு சீக்கிரம்.

தின:—(கீழே சாய்ந்து) ஐயோ! போடுதே மயக்கம். இல்லையா பிராந்தி? இல்லாவிட்டால் எங்கிருந்தாவது, என்ன விலை கொடுத்தாவது——

[மூச்சுத்திணறிப் பேசமுடியாமல் தவிக்கிறான்.]

தங்க:—முத்து! ஓடிவா! ஓடிவா!! அதோ இருக்கிற அஞ்சு குப்பியிலே எடுத்தா பெரிய குப்பியே.

[முத்து விரைந்தோடிக்கொண்டுவருகிறான் ஆனையப்பன் அதை உடைத்துத் தினகரன் வாயில் ஊற்றுகிறான்]

தின:—நிறுத்து. நிறுத்து. இப்போதைக்குப் போதும். ஐயோ! உபத்திரவம் பொறுக்க முடியவில்லையே.

காம:—என்ன உபத்திரவம்? சொல்லித்தொலை சீக்கிரம்.

தின:—பேச முடியல்லையே. வாங்க எல்லாரும். நீங்களே பார்த்துக்குங்க: அவுத்துப்பாருங்க இந்தத் துணியை.

[போர்த்தியிருந்த மேல்துணியை எல்லோரும் சேர்ந்து அவிழ்க்கிறார்கள்]

காம:—அடபாவி! என்னடா தேகமுழுக்க ரத்தம் மயமாயிருக்கு.

தின:—ஐயோ! அப்பா!!—மெள்ள! மெள்ள!!—போகுது உசுரு பிராந்தி! பிராந்தி!!

காம:—அட, பாவிப்பயலே! என்னடா செஞ்சுக்குண்டுட்டே? இப்படியா கல்லைத்தூக்கிப் போட்டுக்குவே?

தின:—உனக்குப் புத்திகித்தி இருக்கா? தான்சாக ஆராவது மருந்து தேடுவாங்களா? சொல்ரேன். இந்த ரத்தத்தே நிறுத்த வழி பண்ணுங்க.

தங்க:—இப்ப யாரும் பேச்சுக்குடுக்காதேங்க. ரத்தம் நிண்டு போனுத்தான் புளெக்க முடியும். ஆனு வைத்தியங்களுக்காவது அம்ப வேலேக்காரங்களுக்காவது இது சேதி தெரியப்படாது அம்பளே எல்லாம் செஞ்சு பாப்போம்.

தின:—கொஞ்சம் பிராந்தி. [முத்து சிறிது வாயில் ஊற்றுகிறுன்]

தங்க:—ஆத்தாடி! கத்தி வெட்டெப் பாத்தீங்களா? எம்பிட்டு ஆளம் போயிருக்கு!!

தின:—என்ன, பூ! இரண்டரை அங்குலத்துக் கதிகம் பாஞ்சிராது.

ஆனே:—கொஞ்சம் பேசமுடிஞ்சிச்சின்னுச் சுருக்கமாக என்ன நடந்திச்சு இண்டு சொல்லுங்களேன்.

தின:—கொஞ்சம் களேப்பாஇருக்கு.—அனுவசியமா மட்டும் கேள்வி கேக்காதேங்க. நாலுநாளா நல்ல இருட்டு. ஒரு துணிக்கு இரண்டு துணியாப் போத்திச் சுத்திக்கிண்டேன். நாலஞ்சுபை நிறையப்பணம் எடுத்துக்கிண்டேன். எப்பாடு பட்டாவது மாயாண்டி வகையராக்களெக் கண்டே திரும்பறதின்னு புறப்பட்டேன். அலஞ்சேன் நாலஞ்சு நாளா. அலஞ்சதுதான் மிச்சம். எதிர்ப்பட்ட சமுசிபப் பேர்வழிகளெ ஒருத்தரெக் கூட விடாமே ரொம்ப சாமார்த்தியமா, என்னென்னவோ விசாரித்துப் பார்த்தேன். ஒரு பயலாலேயும் ஒண்ணும் சொல்ல முடியல்லே. இன்னிக்குத் தன்னுலே மனம் விட்டுப்போய் திரும்பரபோது, ஆரு செஞ்ச புண்ணியமோ, அகப்பட்டான் ஒத்தன். அவனே முன்னப் பின்னே எனக்குத் தெரியாது. இருந்தாலும், அவன் அகாதப் பேர்வழி. பல கேள்விகள்போட்டு 'நான் சர்க்காரு ஆரு இல்லே' இன்னு நல்லாத் தெரிஞ்சுக்கிண்ட பிற்பாடு, "எனக்கு மாயாண்டி ஆள்களேயே தெரியாது. ஆனு அவர்களெப் பற்றிக் கேள்வி மட்டுமுண்டு. அவாகளில் ஒருவனே அறிந்தவன் எனக்குத் தெரிந்தவன். கூடுமானுல், அவன்மூலம் ஏதாவது தெரிந்து கொள்ளலாம்" என்று சொல்லி, அவனிடம் அழைத்துச் செல்ல ஒரு பையைக் கூலியாகப் பெற்று, அவனே வரவழைத்து, என்னே அவனிடம் ஒப்புவித்துவிட்டுப் போய்விட்டான். இவன் அவனிலும் அகாதப் பேர்வழி. அவனிலும் பல கேள்விகள் என்னேக் கேட்டுத் தன்னேத் திருப்திசெய்துகொண்டு என் இரண்டு கண்களேயும் இறுகப் பொத்திக்கட்டிக் கல்லும்

முள்ளும் சேறும் சகதியும், நீரும் நிரம்பிய பல இடங்களுக்கு இழுத்துச் சென்று, கடைசியில் ஓர் இடத்தில் என்னை நிறுத்தி, சிட்டி அடித்து, எவனோ ஒருவனை வரவழைத்து, அவனிடம் என்னை ஒப்பிவித்து, அவன் காதோடு ஏதோ சொல்லித் தனக்குச் சிரம தக்ஷிணைக்காக ஓர் பையைப் பெற்று ஓடிவிட்டான். கடைசியாக, என்னைக்கைப்பற்றியவன், என்னை, காலொடியக் கையொடிய, மண்டையில் சுவரும் கதவுநிலையும் முட்டிக் காயப்படுத்த, செத்த நாயை இழுத்துச் செல்வதுபோல் என்னைக் கரகரவென்று இழுத்துச் சென்று, ஓர் இருட்டறையில் இருந்த நாற்காலியில் இருத்தி, வாசற் கதவையும் நான் இருந்த அறைக் கதவையும் தாழிட்டு, அறையின் சாளரக் கதவைத் திறந்து வைத்து விளக்கேற்றி, இறுகப் பொத்திக் கட்டியிருந்த என் முகத் துணியை அவிழ்த்தான். அப்பொழுது என் மனம் பட்ட பாட்டை என் நிலையில் இருந்தவர்களே அறிவார்கள். என் கண்ணைத் திறந்துவிட்டபின் விநோத முக மூடிகளுடனும் மாறு வேஷத்தோடும் இருந்த நான்கு பயங்கர மனிதர்களையும் ஒரு அழகிய பெண்ணையும் கண்டேன். என் தைரியத்தைக் கைசோரவிடாமல் நெடுநேரம் அவர்களுடன் சம்பாஷித்து, நான் வந்த காரியத்தை எவ்வளவோ மாற்றி ராஜத்துவேஷ விஷயமாய்ப் பல கூறி, கிழப்பாண்டியனையோ அவன் மந்திரிகளையோ மங்கையர்க்கரசியையோ, முடியுமானால் மூனுபேரையுமேயோ, கூடிய சீக்கிரத்தில் கொன்று தீர்க்கவேண்டுமென்று வற்புறுத்திக் கூறி அவர்களுக்கு உற்சாகம் உண்டாகும்படி கைப்பை மூன்றையும் அச்சாரமாய்க்கொடுத்து, காரியம் சீக்கிரத்தில் முடிந்து விட்டால், இவைபோல இன்னும ஏழு பைக்குக் குறையாமல் கிடைக்குமென்று ஆசை வார்த்தை சொல்லிக் கொண்டிருந்தேன். அவர்களுக்கு உண்டான சந்தோஷம் இவ்வளவு அவ்வளவு இல்லை. சீக்கிரம் காரியம் முடிய அவர்கள் பூராக் கள்ளுக் குடித்து, இருளன், மாடன், கறுப்பண்ணச்சாமி முதலிய தங்கள் சாமிகளைக் கும்பிட்டுக் குதிச்சுப் பாடி, கொம்மாளம் இட்டுக் கொண்டிருக்கையில், என்ன சொல்வேன்!—அதிகார தோரணையோடு ஆரோ கதவிடிக்கும் சத்தம் கேட்டது. அங்கிருந்த குட்டி, விஷயம் அறிந்துவர வெளிச் சென்றவள், மூச்சுத் திணற ஓடிவந்தாள். அவள் முகம் பிணம்போல

வெளுத்திருந்தது. "எடேங்க ஓட்டம். எடுங்கஓட்டம்" இன்னு பதறிக் கதறினுள்.

எல்லாரும்:—ஐயோ! குபீர் இங்கிறதே! என்ன நடந்தது?

தின:—உங்களுக்கே இப்படியிருந்தா, ஒண்டி சண்டியாய் இருந்த எனக்கு எப்படிஇருந்திருக்கும்! இருக்கட்டும். சொச்சத்தைகேளுங்க. கண்மூடிக் கண் திறப்பதற்குள் தபகுபலாய்ப் போலீசு உடையோடும் பட்டாளத்து உடுப்போடும் எம்பிட்டு ஆளுக நுழெஞ்சுட்டாங்க தெரியுமா? அவர்களை அழைச்சு வந்த அதிகாரி, திகச்சு நின்ற எங்களைப்பார்த்து, "முதல் மந்திரியார் மூலம் மகாராஜாவின் ஆணையின் பேரில் புதிதாக அதிகாரம் பெற்று வேலைக்கமர்ந்த வீரராஜசேகரனுகிய நான், மாட்சிமை தங்கிய மகாராஜாவினுடைய ஆணையையும் தேசச் சட்டத்தையும் முன்னிட்டு, உங்கள் யாவரையும் கைதி செய்கிறேன். எவ்வகை ஆக்ஷேபமும் இன்றி உடனே உங்களை ஒப்புக்கொடுப்பீர்களாக" என்றான். இதைக் கேட்டவுடன் கொலைஞர்களில் ஒருவன், "ஒப்புக் கொடுக்கவா வேண்டும்? நல்லது!" என்று கூறிக்கொண்டே, ஒரு போலீஸ் உத்யோகஸ்தன் கையில் இருந்த பட்டயம் ஒன்றை வெடுக்கெனப் பிடுங்கினான். அதற்குள் மற்றவர்கள் மருந்து கெட்டித்துத் தாங்கள் சுவரில் மாட்டியிருந்த கைத்துப்பாக்கிகளை விரைந்து எடுத்தார்கள். என் கதிதான் அதோகதியாய்விட்டது: நான் இன்னான் என்பதை வந்தவர்கள் கண்டுபிடித்துக்கொண்டுவிட்டால் என்ன செய்வதென்பதே என்னுடைய முதற் கவலை. என்னை அறிந்தால் உங்களை அறிய எவ்வளவு நாழிகை செல்லும்? எல்லா ஆபத்திலிருந்தும் தப்ப எனக்கொரு யுக்தி தோன்றிற்று. எரிந்துகொண்டிருந்த விளக்கை ஓடிப்போய் ஊதி அணைத்தேன். இதுவும், என் மாறுவேஷமும் முகமூடியுமே, என்னைக் காப்பாற்றின. இருந்தாலும் ஓடிப்போக வழி தெரியாமல் முழிச்சேன். ஜன்னலின் இடுக்கு வழியாய் அறையில் விழுந்த இரண்டொரு சந்திர கிரணங்களின் மூலம், வீரராஜசேகரன் இருந்த இடம் தெரிந்துகொண்டேன். அவன் மார்பை நோக்கி, விட்டேன் ஒரு குத்து. உயிர் போயே இருக்கவேண்டியது அவனுக்கு. நான் எவ்வளவோ குறி தவருமல் குத்தியும், கைத்திறம் வாய்ந்த அந்த வீரன், மின்னலினும் அதிவிசைமாய்த் தன் கைக்கத்தியால் என் குத்தைத் தடுத்து

இருந்தினன் ஒரு இருத்து என் மார்பில். மூச்சுக் கீச்சு விடாமல் விழுந்துவிட்டேன் கீழே. நான் நின்ற இடம் நோக்கித் துப்பாக்கி வெடிகள் இரண்டு, என்மீது பிரயோகிக்கப்பட்டன. நான் என் யுக்திபால் குப்புற அடித்து விழுந்திராவிடில், போயே இருக்கும் என் பிராணன். துப்பாக்கி வெடிகளின் வெளிச்சத்தால், நல்லவேளையாய்த்திறந்தகதவோடு கூடிய, சமீபத்திலிருந்த ஓர் அறை தென்பட்டது. யார் செய்த புண்ணியத்தாலோ, எவரும் காணாது புகுந்தேன் அதற்குள். ஓசைப்படாமல் அவ் அறையின் ஜன்னலைத்திறந்தேன். என் அதிர்ஷ்டத்தால் அது கம்பி அடைக்காத ஜன்னலாய் இருந்தது. பூமிக்கு அது அதிக உயரத்திலும் இல்லை. கீழே குதித்து இரண்டு மூன்று கொல்லைச் சுவர்களையும் தாண்டி உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வெகு நாழிகைக்கப்புறம் எப்படியோ வந்து சேர்ந்துவிட்டேன் இங்கே.—சரி! கொஞ்சம் பிரந்தி.

காம:—அப்பா! உன் தைரியமே தைரியம். நானு இருந்தாக் கழிச்சலெடுத்து, ஆளைக்கண்டதும் அங்கேயே செத்துக்கிடப்பேன். இருக்கட்டும். கள்ளங்களுக்கு உன்னை இன்னாருன்னு தெரியுமா?

தின்:—தெரியப்படுத்த நான் என்ன அவ்வளவு மூடனா? அவர்களுக்கு என் பேரும் தெரியாது. நான் இன்னான் இங்கிரதும் தெரியாது. 'ஏதோ ராஜாங்க சம்பந்தமாகப் பாண்டியனைப் பகைச்ச ஒரு பணக்காரனுடைய கையாள் நான்' இங்கிறது தான் அவர்களுக்குத் தெரியும்.

காம:—பேஷ்! பேஷ்!! இந்தமட்டும் நீயும் தப்பி எல்லாரையும் தப்பிச்சுவச்சையே—இருக்கட்டும். எனக்கு ஒரு விஷயம் ஆச்சரியத்திருக்குமேல் ஆச்சரியமா இருக்கிறது. இதுவரை ஒத்தருக்கும் தெரியாத மாயாண்டி வகையறாக்கள் இருக்கிற இடம் நேத்திப் புதுசாவந்த மந்திரியின் ஆளுக்கு எப்படித்தான் தெரிஞ்சுதோ!

தங்க:—மகாராஜாவுக்கு இல்லெ சொல்றேன். இதிலே எனக்கு ஆச்சரியமும் தோணல்லெ; சாமர்த்தியமும் தோணல்லே. எல்லாம் வேலைக்காரன் செய்யற வேலைக்கோளாறு.—தினகராசாவுக்குத் தற்செயலாய் இன்னிக்கு அவங்கவீடு தெரிஞ்சது போலவே, அவனும்தற்செயலா முந்தியே கண்டறிஞ்சிருக்கான்.

காம:—அப்படியானா எனக்கு முன்னிலும் அதிக பயமும் நடுக்கமு மாயிருக்கு. புதுசா வந்திருக்கிற பயலெல எப்படியாவது தொலைச்சாலொழிய நமக்கு மனசு சமாதானப்படாது.

தங்க:—இதைப் பத்தி உங்களுக்கென்ன கவலை? தம்பிரான் சாமியும் முத்துவும் இருக்கும் வரைக்கும் நமக்கு ரோசனையே வேண்டாம்—ஏண்டா முத்து! ஓங்கய்யாவைக் கரையேத்த இன்னும் உனக்கு மனசு வரல்லையா? என்னிக்கிடா நல்லநாள் பாத்திருக்கே? நீ செத்ததுக் கப்பறமா!

முத்து:—கோவிச்சிக்காதேயுங்க. கட்டாயமாய் நாளை ராவே அந்தச் சனியனை தொலைச்சே போடறேன். தினம் சமயம் பாத்துக் கிட்டுத்தான் இருக்கேன். ஆனா கிட்டப் போயிட்டாக் காலும் கையும் உடம்பும் தன்னாலே பதறது. அதனாலேதான் [illegible]

காம:—சரி. நாளைக்கும் பதறத்தான் போறது. இருக்கட்டும்— தினகரா:—அந்த நாலுபேர் கதியும் என்ன ஆயிருக்கும்?

தின:—மாயாண்டி வகையராத்தானே? வந்தவன் ஏமாந்த பேர்வழி யில்லே. பலே கோப்பன். நல்ல வேளையா உங்களுக்கெல்லாம் நல்ல காலம் இருந்தது, நான் ஒருத்தன் தப்பி வந்துவிட்டேன். —அந்த நாலு பேருடைய விசாரணையோ, மரணத்தீர்ப்போ நாலஞ்சு நாளைக்குள்ளே வெளியாகாமலா போகப் போறது?

காம:—போதும்! போதும்!! இனி இதைப்பத்திப் பேச்சு வேண்டாம். மணி மூணு அடிச்சிடுத்து. அணையுங்க விளக்கை இங்கேயும் அந்தச் சனியன் வாராதே இருக்கணுமே இன்னு கலநெருப்பைக் கட்டிக்கிண்டிருக்கிறேன். இப்போ. நாலஞ்சு நாளைக்கு ஒத்தரும் போகாதேங்கோ வெளியிலே. அம்ப[illegible]சிய ஆளுக மூலமா தெரிஞ்சுக்குவோம் எதுவும்.

தின:—அதுதான் சரி. அதுதான் நானும் சொல்ல இருந்தேன்.— பிராந்தி இன்னும் கொஞ்சம்.

[முத்து பிராந்தி கொடுத்து விளக்கை யணைக்க, யாவரும் தத்தம் படுக்கைக் குச் செல்லுகிறார்கள்.]

(காட்சி முற்றிற்று)

திருக்குடந்தை: ஆபக்கண்ணனார்.

காமந்தக நீதிசாரம்.

(இரண்டாவது ஸர்க்கம்)

அரசனானவன் தர்க்கம் வேதாந்தம் முதலிய ஆத்ம வித்தையையும் வேதங்களையும் கிருஷி முதலிய பொருளாதார நூல்களையும் ராஜநீதியையும், அவற்றையறிந்து அவற்றிற்கூறியபடி ஒழுகிவரும் பெரியாரிடம் வணக்கத்துடன் அப்பியசிக்கவேண்டும். ஆத்ம வித்தை, வேதங்கள், கிருஷி முதலிய பொருளாதார நூல்கள், புராதனமான ராஜநீதி—ஆகிய நான்குவித்தைகளே ஜனங்களின் நன்மைக்குக் காரணங்களாயிருக்கின்றன. வேதங்கள்,பொருளாதார நூல், ராஜநீதி, இவைகளே வித்தைகளென்றும், ஆத்ம வித்தை வேதத்தின் பிரிவென்றும் மனுவின் சிஷ்யர்கள் எண்ணுகின்றனர். உலகத்தோர் பொருளையே.பிரதானமாக எண்ணி இருக்கின்றமையால், பொருளாதார நூல் ராஜநீதி இவைகளே வித்தைகளென்று பிரகஸ்பதியின் சிஷ்யர்கள் நினைக்கின்றனர்.

ராஜநீதி ஒன்றே வித்தையாகும். ஏனெனில் ராஜநீதியே ஆத்ம வித்தை முதலியவற்றின் காரியங்கள் எனச் செவ்வனே சொல்லப்பட்டு இருக்கின்றன வென்பது சுக்ராசாரியாருடைய அபிப்பிராயமாகும்.

ஆத்ம வித்தை, பொருளாதார நூல், வேதங்கள், ராஜநீதி ஆகிய நான்குமே வித்தைகளென்பது சாணக்கியருடைய அபிப்பிராயமாகும். ஜனங்கள் இந்த நான்கு வித்தைகளையே முயன்று வருகின்றனர்.

ஆத்மஞானமே ஆர்வீக்ஷகி என்று கூறப்படுகிறது. வேதங்களில் புண்ணிய பாவங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. பொருளாதார நூலில் சம்பத்து விபத்து இவைகள் கூறப்படுகின்றன. ராஜநீதியில் நியாயம் அநியாயம் இவைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆர்வீக்ஷகி; வேதங்கள், பொருளாதார நூல், இவைகள் 'சத் வித்தைகள்' எனப்படும். ராஜநீதி இல்லாவிடில் சத்வித்தைகள் வீணேயாகும்.

எப்பொழுது ராஜநீதி நாயகனை அடைகிறதோ, அப்பொழுதே அவனை ஆத்மவித்தை முதலியனவும் அடைந்து சேவிக்கின்றன. பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் வருணத்

தார்களும், பிரும்மசாரி கிரகஸ்தன் வானப்பிரஸ்தன் சந்நியாசி என்னும் ஆசிரமிகளும், ராஜ நீதி முதலிய வித்தைகளில் நிலைபெற்றிருக்கின்றனர். அரசன் அவ்வித்தைகளை அறிவதாலும், அவைகளைக் காப்பாற்றுகின்றமையாலும், அப்புண்ணியத்தில் ஆறில் ஒரு பங்கு பெறுகிறான். ஆத்ம நீதி தத்துவங்களைக் காட்டுகின்றனமையாலும், 'ஆத்ம வித்தை'எனப்படும். அரசன் இந்த வித்தையினுடைய உண்மையை அறிந்து சுக துக்கங்களைக் கொள்ளவும் தள்ளவும் வேண்டும்.

ரிக், யஜுர், சாமம் என்பனவைகள் வேதங்கள் எனப்படும். வேதங்களிற் கூறியபடி நடக்கும் வேந்தன், இகபரசுகம் இரண்டையும் பெறுவான். வேதத்தின் அங்கங்கள், நான்கு வேதங்கள், மீமாம்ஸை, தர்க்க சாஸ்திரம் தர்மசாஸ்திரம் புராணம் ஆகிய பதினன்கு வித்தைகளும் த்ரயீ என்று சொல்லப்படுகின்றன.

பசுவைக்காத்தல், கிருஷி, வியாபாரம், இவைகள் பொருளாதார நூலைப் பின்பற்றியவர்களின் தொழில்களாகும். பொருளாதார நூலை மேற்கொண்டவர், தத்தம் தொழில் செய்வதில் பயமே அடைவதில்லை.

சிக்ஷித்தல் 'தண்ட'மெனப்படும். தண்டத்தை மேற்கொண்டிருப்பதால் அரசனும் 'தண்ட'னெனப்படுகிறான். அரசனுடைய நீதி 'தண்ட நீதி' எனப்படும். அது நல்வழியில் செலுத்துகின்றமையால் 'நீதி' என்பப்படும்.

(இன்னும் வரும்)

பண்டித: M. M. நாராயணசாமி ஐயர், முடிகொண்டான

தை ௴ இடையெழுத் தலங்காரத் திற்கு விடை.

ஞாய 'கபாலி' 'சுரம்' 'சூதம்' 'அம்பி'யென
ஆய்ந்திவற்றினிடை ஆர்ந்தவற்றை—நீயறிந்து
நாரமிகு லக்ஷ்மி நரசிம்மன் வேண்டியது
"பாரதம்" தான் என்னப் பகர்.

J. B. பாலசுப்பிரமணிய ஐயர் B.A.

அறம்.

அறம் பொருள் இன்பம் வீடு எனக் கூறப்பட்ட உறுதிப் பொருள் நான்கனுள், அறம் தலைக்கண் உளது. இதனாலே இதன் சிறப்பு அறியலாம். அறம், ஈண்டு யாவராயினும் போற்றற் குரியது. என்னை ? இம்மைக்கண் புகழையும் மறுமைக்கண் இன்பினையுங் கொடுக்கவல்லதாகலின். ஆயின், அவ்வறத்தை யாவரானும் போற்றற் கியலுமோவெனின், அவ்வவர் நிலைமைக்கியைய இயலுமென்க.

> "வடுவிலா வையத்து மன்னிய மூன்றுள்
> நடுவண தெய்த விருதலையும் எய்தும்
> நடுவண தெய்தாதான் எய்தும் உலைப்பெய்(து)
> அடுவது போலுந் துயர்."

என்பவாகலின், பொருளை யுடையார்க்கன்றே ஏனை அறமும் இன்பமு முண்டாமெனின், அவ்வறம் மிக்க பொருளுடைமையாற் சிறப்பெய்து மேனும், அஃதிலார்க்கும் அறஞ்செய்தலியலாததொன் றன்றென்க. அஃதென்னை யெனின், ஒவ்வொருவருந் தத்தம் முயற்சிக் கேற்ப உணவு பெற்றுத் துய்க்கு மிடத்து, அவர் அதினோர் பகுதி தம்மினுங் கீழாயார்க் களிப்பின், அதுவும் அறமாதலின் என வுணர்க. மேலும், அறமென்பது ஈதல் மட்டும் அன்று: மறமல்லன வெல்லாம் அறமாம். ஆதலின் ஏனையோர்க்கு எவ்வாற்றானும் இன்பஞ் செய்தலும் அறமாமென்க. ஆகலின், ஈண்டுப் பொருளிலார்க்கும் தம்மாற்றற் கேற்ப அறம் புரிதல் கூடும் என்பது பெறப்பட்டது.

"அறத்தினூஉங் காக்கமுமில்லை" என்பவாகலின், அறத்தின் பெருமை உரைப்பாம். "அன்றறிவாமென்னா தறஞ்செய்க மற்றது பொன்றுங்காற் பொன்றாத்துணை" என ஆன்றோர் கூறலின், அவ் வொருவற்கு இறுதிக்கண் நற்றுணையாம் என்பது புலனாயிற்று. ஆயின், ஈண்டைச் செல்வம் துணையன்றோவெனின், அச்செல்வந்தானும் எப்போதுமிருப்பதொன்றன்றிச் சகடக்கால் போலவருந் தன்மைத் தாகலானும், அங்ஙனம் சுழலாது ஓரிடத்தே நிற்கப்பெறினும் இறுதிக் காலத்துந் தொடர்வுற்று மறுமையினு முதவத்தக்கதன் றாகலானும், உண்மையாய துணையன்றென்க. ஆயின், அச்செல்வத்

தாற் பயனென்னை யெனின், அஃது நிலவுலுறும்போதே அறனு னறம்புரிதலே பயனும். இவ்வாறு அறமியற்றி மேன்மை எய் தற்கே செல்வமளிக்கப்பட்டதன்றி, மறவழியில் அழிக்கப்படுதற் கும், கொன்னேபுதைக்கப்படுவதற்குமன்று. செல்வமுடையார் முற் பிறப்பின் செய்த அறவினையின் ஊற்றத்தால் தாம் செல்வமடைந்த வுண்மையை மறந்திலராயின், இப்பிறப்பின் கண்ணும் அவ்வறத் தினைச் செய்துவாழ்தலிற் றுழார் என்க.

இப்பிறப்பின்கண் கடுந்துயர்கொண்டு உழல்வார் முற்பிறப் பில் அறம்செய்யாதவராவார். அவர்களே "இது யாம் செய்த வினை" யெனலின், இவ்வுண்மை வலியுறும். எனவே, மறுமையின்கண் இன் புற்று வாழவிரும்புவார்க்கு அறஞ்செய்தல் இன்றியமையாததாம். இவ்வறமொன்று இன்றாயின், அந்தோ! உயிர்கள் எங்ஙனம் இன் புறுதல்கூடும்? புத்தேளிர் உலகமும் அறத்தாற் பெறப்படுமெனின், அதன் மாண்பு ஈண்டு வரைதற்பாற்றோ?

அறம், உடம்பெடுத்ததனுலாம் பயனும். இதனை, "வருந்தி உடம்பின் பயன் கோண்டார் கூற்றம்—வருங்காற் பரிவ திலர்" என்பதனுல் உணர்க. பெறலரிய இம்மானிடப் பிறப்பை யுற்றும் அதன் பயனும் அறத்தைப் புரியாராயின், பிறந்திலராவர் என்க. எனவே, அவர்கள் உற்ற பயனில்லாப் பிறப்பானது மேல் இம்மக் கட் பிறப்பிற் குரிய ரல்லர் என்பதைக் காட்டுமன்றோ?

இவ்வறத்தின் மேன்மையை யுன்னி ஆன்றோர் தம் ஒப்பற்ற நூல்களினும் அறவாழ்த்துக் கூறிச் செல்கின்றனர். "பரவுக வறக்கள்" எனக் கூறப்பட்டது காண்க. "தழைக்குக அறனே"

ராமசுப்பிரமணிய நாவலர்,
பத்திராதிபர், "விசாலஹிருதயம்" பத்மநாபபுரம்.

வண்டமிழ்க்கவிஞர்

நல்லியல்வாய்ந்த தமிழ் மெல்லியலைத் தம்பேரறிவாலும் தெய்வ வன்மையாலும், நன்னூல்களில் மூலம் நன்குலவவைத்துப் போந்த புலவர்பெருமக்களாவார் பலர், அவருள் அந்தணர்சிலர், அரசர் சிலர், வணிகர் சிலர், வேளாளர்சிலர், மெல்லியலிவாரும் சிலர். அவர்

கள் தம்மைத்தாம் மதியாமன்றி வேறெக்காரணத்தாலோ, தமது வரலாற்றைத் தாமே எழுதிவைத்துப் போந்தாரிலர். அதனாலே அத்தகையாரது உண்மைப் பெருமையினையும் அறியாது விழிக்கின்றேம். இவ்வமயத்து யாங்ஙனமோ சிற்சிலகதைகள் எழுந்து ஆதாரம் ஒன்றுமில்லாமல் சிலதனிப்பாடல்களின் உதவிகொண்டு உலவலாயின. அக்கதைகள் கேட்போர்க்குச் சிற்சிலஇடங்களில் இன்பம் விளைப்பன வேனும், பலவிடங்களில் கேட்போர் மனதையும் புடைப்போர் நினைவையும் புண்ணுக்கிஅப்புலவர் பெருமக்களையும் இழிவுபடுத்தி நந்தமிழ்த் தாய்க்கும் பெருவசையளித்து நிற்கின்றன. புலவர்களின் சரிதங்களின் மூலம் அவரது கலைநலனும், பெருமையும் நிலையும், நடையும்தெரியக்கிடக்கின்றன. நாமும்அதனை மன்த்துட் கொண்டு போற்றி அவர் வழி நடத்தல் வேண்டுமென்னும் நன்னினைவிற்கு காரணமாயுள இதன் பொருட்டே அவரதுகாலமும் அவர் பயின்ற இடமும் அவர் நூல்செய்த வழியும் ஒவ்வொரு நூல்முகத்தும் அந்நூலைக்கற்றுத்தெளியவிரும்புவோர் அறியவேண்டுவனவாம் என்று கூறுகின்றார்கள். அங்ஙனமிருப்பவும் அவற்றைவிடுத்து, விநோதம் கருதியோ, விரோதம் கருதியோ, இயற்றியகதையின் மூலம் அவர்கள்மீது வெறுப்புண்டாக்கியதோடு அவர்களியற்றிய நூல்களின்மேல் அன்பின்மையையும் [illegible]சியத்தையும் உண்டாக்கித் தமிழ் மொழிக்கே பேரிடையூறு வி[illegible]ள்ளமையை நன்குற்றுநோக்கும் தமிழ்மக்கள் மனங்கன்றுமாறு [illegible]ப்துள்ளார்கள்.

இத்தகைய இக்கொடுமையை ஆராய்ச்சி மிக்க இக்காலத்து, தமிழகமும் நன்காராயாது புறக்கணித்தலை நோக்க, 'இவை யாவும் உண்மையேயோ' என மயங்கக் கிடக்கின்றன. ஆதலின் இனி மேலேனும் பலவாற்றானும் துருவி யாராய்ந்து இக்கதைகள் உண்மையென்றுதல் வெண்மை மொழியென்றுதல் விரிக்கவேண்டுகின்றேன்.

இத்தகைய சிறுமை பயக்கும் கதைகள், பெரும்பாலும் சங்ககாலத்திற்குப் பிற்பட்ட புலவர்களின் மேலேயே ஏற்றபட்டிருத்தலின் அவருள் இரண்டொருவரைப்பற்றி மட்டும் உதாரணமாக எடுத்துக்காட்டி மேற் சொல்வேன்.

கவிச் சக்கரவர்த்தியாய்க் கலைமகளருள் பெற்ற கம்பர், சோழனொடு மாறுகொண்டு சேரநாடுற்றிருந்த காலத்தில், ஆண்டுத் தாம் பாடிய இராமாயணத்தில் "எண்ணுதற் காக்கரிது" என்னும் பாட்டுக்குத்தாமே உரை விரிக்கும் காலத்தில், "கண்ணினைச் [illegible]ன்ற

இமையிற் காத்தனர் என்பதற்கு 'மேலிமை' போல இராமன் யாக சாலையைச் சுற்றிச் சுற்றி வந்து இலக்குவனை யெச்சரித்தான் "என்றும்" 'கீழிமை போல இலக்குவன் யாகசாலை வாயிலின் நிலைத்து நின்று காத்தான்' என்றும், கூறிப் பின், அடுத்த பாடலில் "காத்தனர் திரிகின்ற காளை வீரரில்" எனக்கூறி முரண்பட்டார் என்பதும், பின்னர் சோழன் தம் மகனைக் கொன்றதற்காகத் தம் எழுத்தாணியாற் சோழன் மகனைக் குத்திக் கொன்றாரென்பதும்; இவை போல்வன பிறவும் வருதல் காண்க.

சிரச் சிங்காதனத்தமர்ந்து பாடிப்,பின் அச்சிரங்களை அவ்வவ் வுடல்களுடன் ஒட்டப்பாடி அதனால் ஒட்டக்கூத்தர் எனப் பெயர் பெற்ற தெய்வத்திறம் மிகுந்த கூத்தன் கவிசக்ரவர்த்தி நவராத்திரி காலத்தில் இருவர் சிரங்களை ஒன்றாய் முடியப் போட்டு வெட்டும் வழக்கம் உடையராயிருந்தாரென்பதும், யாசிக்க வந்த சங்கமரைக் கொலை செய்தாரென்பதும், பொறாமை மிகையாற் புகழேந்தியாரைக் காவற் சிறையகம் சேர்த்தாரென்பதும், மற்றும் பலவும் கூறப் படுவன காண்க.

'வெண்பாவிற் புகழேந்தி'யெனச்சிறப்பிக்கப்பெற்ற, இவர் தமக் கிடர் விளைத்த கூத்தனைக் கல்லாலெறிந்து கொல்வான்கருதி [illegible]டை யவரகத்துச் சென்றொளிந்து அற்றம் பார்த்த அளவில், [illegible]ங் காப் பேரிழிவு கூறப்படுதல் காண்க. இன்னும் ஒவ்வொரு புலவர் செய்கையும் விரிப்பின் பெருகும்.

கல்வி நலனும் அறிவின் செறிவும் ஒழுக்க விழுப்பமும் அரசர் வர் பாசு நிலையும் பெற்று, உலகைத் தம் வயமாக்கி நல் வழியுய்க்கும் புலவர் பெருமக்கள் இத்தகைய பல இழி குணங்கட்கு இருப்பிட மாயினரென்றால் யாவரே நம்புவார்? ஆதலின் இவை பற்றிய உண்மை விளக்கத்தைச்செய்து, பொய்யிருளோட்டுமாறு, தண் டமிழ்த் தொண்டேபுரியும் பேரறிஞர்கட்கு விடுத்து, அதன் நன் முடிவை ஆவலுடன் எதிர் பார்க்கின்றேன்.

A. வேங்கடராமன்
இயற்றமிழ் மாணவன், வத்திராயிருப்பு.

விநோதக்கூற்று.

கிட்டஇருந் தேசுவையோ? சேவிக்கப் பண்ணுவையோ? கிளருஞ்சுற்றம்
முட்டவிடச் செய்துவையோ? மொழியாற்ற(ம்) மாற்றுவையோ?
முரணுவாயோ
கட்டுகடை என்பாயோ? கணவனுரை மறுப்பாயோ? கவறுவாயோ?
இட்டதனைக் கியார்க்கயிறே? தாரப்பேர்தான்? யானறியேன்
இசைப்பாய் நீயே. (1)

மனைவிஒரு கால்விலஃகே எனச்சொல்வார். மற்றந்தமொழியிரண்டிற்
உழக்குக்காலிற்(கு)
அனைவருமே உரைசெய்வாரடியாமென்றே அப்பொருளானதுவல்ல.
“ ஆவி ”யாகும்
எனமனைவி யிசைந்தவசை யிடைவிடாமல் இறங்குமழைஎன்றிடவே
இயம்பக்கேட்டுக்
களையும்உயிர்காழிசைஒன் றனபின்னே காணவெளி யாயினநீ
காணுவாயே (2)

பொற்றாலி யுண்டெனினே உண்டேயென்பார் பொருந்துசுவை,
கல்வி, நிதி, வலி,யுமெல்லாம்
பெற்றாயோ சுவைசிறிது? பேசகல்வி பெண்ணுரைக் கெதிருரைக்கப்
பேசில் உண்டோ?
சற்றேனுங் கடனில்லாச் சகவாழ்வுண்டோ? சாற்றும்வலி மெய்யிலனுற்
சற்றுமுண்டோ?
கற்றாரே யவ்வுரைதான் பொருந்திற்றுண்டோ? சொல்விடுவாய்
என்மனமேதோன்றுமாறே (3)

குறிப்பு:— 2வது செய்யுள் மனைவி சொல்வதைக்கேட்டு உயிர் அடங்கி வெளிவந்ததால் உயிராகிய காற்றிற்கு மனைவியை விலாகாகச் சொல்லப்பட்டது.

3வது செய்யுள் மனைவி உண்டெனின் எல்லாம் உண்டு என்ற சொல்லலாமெனவே, மனைவியிருந்தும் மேற் சொன்னவைகள் இல்லாததைக் குறித்துச்சொல்லப்பட்டது.

அநுபவி.

2619